# மக்கள் ஆய்வு

## People Studies

*Multi-Disciplinary Research Institute*

*சார்பாக*

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்

*வழங்கும்*

சட்டமன்றத் தேர்தல் 2016: ஒரு முன்னோட்டம்

**மழையும் மதுவும் - தேர்தல் வரமா? சாபமா?**
**கூட்டணிப் பேரங்கள் - மாற்றமா? ஏமாற்றமா?**

மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*
2016 ஜனவரி 07-19

*ஊடகவியலார் சந்திப்பு:*

23 ஜனவரி 2016, 11.00 மணி

*இடம்:*

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

*தொடர்புக்கு:*
**மக்கள் ஆய்வு** (People Studies)
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
**கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்**
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com

---

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே”

# மக்கள் ஆய்வு (People Studies) வழங்கும்

## சட்டமன்றத் தேர்தல் 2016 - ஒரு முன்னோட்டம்

## மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் பயிலரங்குகளையும் மக்கள் ஆய்வு (People Studies - *Multi-Disciplinary Research Institute*) தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மக்களின் உள்ளக் கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், 2001 ஜனவரி தொடங்கி இதுவரை தமிழகம்-புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் 30-க்கும் மேற்பட்ட சுற்றுகளில் இரண்டு லட்சம் கி.மீ. வரை பயணம் செய்து பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளை நடத்தியுள்ளது. கிராமப்புற / பழங்குடியின இளைஞர், சிறார் மற்றும் மகளிரின் திறமைகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் கிராமிய ஆய்வு & பயிற்சி மையம் ஒன்றையும் நடத்திவருகிறது.

### *ஆய்வு அணுகுமுறை*

கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் தமிழகத்தின் கணிசமான மாவட்டங்களில் பெய்த பெருமழையின் தாக்கம், நமது ஆகஸ்ட் கணிப்பிற்கு வந்த எதிர்வினைகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் மூன்று மாதங்களே உள்ள நிலையில் மக்களின் எண்ண ஓட்டங்களைப் பதிவுசெய்ய மாநில அளவிலான ஆய்வினை மக்கள் ஆய்வு (People Studies) மேற்கொண்டது.

தமிழகத்தின் 39 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 120 சட்டமன்றத் தொகுதிகளில், ஜனவரி 07 முதல் 19 முடிய, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் கள ஆய்வு வழி தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வில் 5464 பேரைச் சந்தித்துக் கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டன.

தமிழ்ப் பண்பாடு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது. சரளமான, இயல்பான கருத்து-உணர்வுப் பகிர்வின் தேவைக்கேற்ப பதிலறு (open ended) வினாக்கள் கேட்கப்பட்டன.

### *பங்கேற்றோர் பின்னணி*

ஆண்களும் பெண்களும் சம அளவில் பங்கேற்ற இந்த ஆய்வில், சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளோர் 12.2. வயது 30 வரை - 21.8, வயது 31 முதல் 45 வரை - 36.1, வயது 46 முதல் 60 வரை - 22.4 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக*, படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை - 16.7, வகுப்பு 6 முதல் 12 வரை - 51.8, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 28.6. *தொழில்ரீதியாக,* கூலி வேலை மற்றும் விவசாயம் செய்வோர் - 20.7, சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 23.5, பெரிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 11.7, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 20.3, அரசு ஊழியர் - 5.7, மாணவர்கள் - 8.2 (மீதி - பிற தொழில்கள்). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 19.8, மிகவும் பிற்படுத்தப் பட்டோர் - 28.9, பிற்படுத்தப்பட்டோர் - 41.2 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்துக்கள் - 80.9, இஸ்லாமியர் - 11.1, கிறிஸ்தவர் - 5.8 (மீதி - பிற மதத்தினர் / பதில் தெரிவிக்காதோர்). மழையின் தன்மையைப் பொருத்த மட்டில், பெருமழை பெய்த பகுதிகள் - 14.5, கன மழை - 18.8, பரவலான மழை - 18.0, வழக்கமாகப் பெய்யும் அளவுக்கு - 42.6, மழை பெய்யாத இடங்கள் - 6.1.

## *ஆய்வு முடிவுகள்*

***(1) மிக முக்கியப் பிரச்சனை:*** தமிழகம் இன்று எதிர்கொள்ளும் மிக முக்கியத் தேவையாக / பிரச்சனையாக மக்கள் முன்வைக்கும் முதல் அய்ந்து:

| | |
|---|---|
| அரசுத் துறைகளில் லஞ்சம், ஊழல் | **36.1** |
| குடிப் பிரச்சனை | **23.4** |
| குடிதண்ணீர் வசதி இல்லை | **14.2** |
| சீரற்ற மின்விநியோகம் | **12.5** |
| போதிய வேலைவாய்ப்பு இல்லை | **5.4** |

***(2) இந்தப் பிரச்சனைகளை அதிமுக அரசு கையாண்டு வரும் விதம்*** நிறைவளிப்பதாகக் கூறுவோர் - 29.6. பிறரில், அணுகுமுறை மோசம் (30.8) மற்றும் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை (31.3) எனத் தங்கள் அதிருப்தியைப் பதிவுசெய்துள்ளனர்.

***(3) இப் பிரச்சனைகளை எந்தக் கட்சியும் தீர்க்கப்போவதில்லை*** என்ற நம்பிக்கையின்மையைப் பெரும்பாலோர் (56.4) வெளிப்படுத்துகின்றனர். மற்றவர்களின் பார்வையில், இவற்றைத் தீர்க்கும் திறமையுள்ளவையாக இடம்பெறும் முதல் அய்ந்து கட்சிகள்:

| | |
|---|---|
| திமுக | **16.2** |
| அதிமுக | **12.5** |
| பாமக | **8.3** |
| தேமுதிக | **2.1** |
| மக்கள்நலக் கூட்டணி | **1.3** |

கட்சிசாராத தனி நபர்களில் சகாயம் (0.7), சுப. உதயகுமார் (0.3) ஆகியோர் வெகு சிலரால் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

***(4) மிகப் பொருத்தமான நலத்திட்டம்:*** அதிமுக அரசு நடைமுறைப்படுத்திவரும் நலத்திட்டங்களில் மிகவும் பொருத்தமானவையாக மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் முதல் அய்ந்து:

| | |
|---|---|
| விலையில்லா விசிறி, மிக்ஸி, கிரைண்டர் | **23.6** |
| மாணவர்க்கு மடிக்கணினி | **21.1** |
| திருமண உதவித்தொகை | **14.5** |
| விலையில்லா கால்நடை | **10.2** |
| முதியோர் உதவித்தொகை | **8.3** |

*அடுத்த அய்ந்து இடங்களில்,* அம்மா உணவகம் (5.0), பிரசவத்திற்கு உதவித்தொகை (4.4), பள்ளி மாணவருக்கு சைக்கிள், சீருடை, நோட்டு-புத்தகம் (3.3), அம்மா மருந்தகம் (2.1), அம்மா குடிநீர் (1.1) ஆகியவை இடம்பெறுகின்றன.

"இலவசங்கள்" தேவையில்லை என ஓரிருவர் மட்டுமே (0.8) தெரிவித்துள்ளனர்.

*(5) அதிமுக அரசின் ஒட்டுமொத்தச் செயல்திறன்:*

| | நன்று | சொல்லும்படி ஏதுமில்லை | மோசம் |
|---|---|---|---|
| 2011 மே முதல் 2014 செப்டம்பர் வரை ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது | 55.2 | 23.2 | 17.5 |
| 2014 செப். முதல் 2015 மே வரை பன்னீர்செல்வம் முதல்வராக இருந்தபோது | 21.9 | 28.0 | 45.6 |
| 2015 மே முதல் ஜெயலலிதா முதல்வராக உள்ள இப்போது | 33.0 | 26.1 | 36.3 |

மழைக்கு முன்னால் கடந்த ஆகஸ்டில் நடத்திய கணிப்போடு ஒப்பிடுகையில், முதல்வரின் தற்போதைய செயல்பாடுகளில் முன்பிருந்ததை விட அதிக அதிருப்தி வெளிப்படுவதைக் காணலாம்.

***(6) மேற்கண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாக்களிப்பது என்றால்,*** வரும் சட்டமன்றத் தேர்தலில் அதிமுக-வுக்கு வாக்களிக்க மாட்டோம் என்ற பதிலுக்குச் சற்று அதிக ஆதரவு இருந்தாலும், இதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாக்களிக்கப் போவதில்லை என்ற எச்சரிக்கையையும் கூடவே வெளிப்படுத்தியுள்ளனர்.

| | |
|---|---|
| வாக்களிப்பேன் | 33.3 |
| வாக்களிக்க மாட்டேன் | 39.0 |
| இப்போது எதுவும் சொல்லமுடியாது | 27.7 |

## மழை-வெள்ள அரசியல்

***(7) மழை-வெள்ள நிவாரணம்:*** பாதிக்கப்பட்ட எல்லாருக்கும் முறையாக நிவாரணம் வழங்கப்படுவதாக ஏறத்தாழ நான்கில் ஒருவர் (24.1) தெரிவிக்கின்றனர். நேரடியாக வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை செலுத்தப்பட்டதைப் பலரும் பாராட்டியுள்ளனர். மற்ற முக்கியப் பதில்கள்: கணக்கெடுப்பு சரியில்லாததால் பாதிக்கப்பட்ட பலர் விடுபட்டுள்ளனர் (20.4), அதிமுக கட்சிக்காரர்களுக்கே நிவாரணம் வழங்கப்படுகிறது (14.1), அதிகம் பாதிப்பு அடைந்தவர்களையும் மற்றவர்களையும் சமமாக நடத்துவது சரியல்ல (6.2).

***(8) தேர்தலில் நிவாரணத்தின் தாக்கம்:*** நிவாரணத்தைத் தொடர்ந்து தேர்தல் வருவதால் அதிமுக-வுக்கு ஆதரவு அதிகரிக்க வாய்ப்புள்ளது என்போரும் (22.1), மக்கள் விழிப்போடு இருப்பதால் தேர்தலில் எந்தத் தாக்கமும் இருக்காது என்போரும் (22.3) ஏறத்தாழச் சமமாக உள்ளனர். இதனால் அதிமுக-வுக்குப் பின்னடைவுதான் ஏற்படும் என்ற கருத்து பெரும்பான்மை ஆதரவுடன் (31.6) முதலிடம் பெறுகிறது.

## மது அரசியல்

***(9) மது அருந்துவோர் எண்ணிக்கை*** தமிழகத்தில் பெருகிவருவதற்கான காரணங்களாக மக்கள் முன்வைக்கும் முதல் அய்ந்து:

| | |
|---|---|
| கடினமான உடல் உழைப்பினால் வரும் அசதி | 30.1 |
| தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் | 24.2 |
| இளைஞரிடையே அதிகரித்து வரும் பணப் புழக்கம் | 17.4 |
| மிக எளிதாக, நினைத்த நேரத்தில் மது கிடைக்கும் வசதி | 13.9 |
| படித்தும் வேலை கிடைக்காத விரக்தி | 6.6 |

***(10) முழுமையான மதுவிலக்கு?:*** கண்டிப்பாக மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்ற கருத்தை விட (25.7) இரு மடங்கு ஆதரவுடன், இந்தக் கோரிக்கை நியாயமானது எனினும் நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்ற கருத்து (51.9) முதன்மை பெறுகிறது. அளவோடு மது அருந்துவதில் தப்பில்லை என்பதால் விற்பனையை முறைப்படுத்தினால் போதும் (13.5), மதுக் கடைகளை மூடுவது கள்ளச் சாராயத்திற்கே வழிவகுக்கும் (4.9) ஆகியவை பிற கருத்துக்கள்.

***(11) உறுதியான நிலைப்பாடு:*** மது/விலக்கைப் பொருத்தவரை தன் நிலைப்பாட்டில் ஓரளவாவது உறுதியாக இருந்து வந்துள்ள கட்சியாக பாமக-வும், தொடர்ந்து மிக நெருக்கத்தில் திமுக-வும் இடம் பெறுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாமக | 22.4 | திமுக | 21.7 | மதிமுக | 18.3 |
| அதிமுக | 16.6 | விசிக | 8.1 | தேமுதிக | 6.2 |

***(12) தேர்தலில் தாக்கம்:*** மது விலக்கு குறித்த கட்சிகளின் நிலைப்பாடு, வரும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு குறைவுதான் என்பதே மிகப் பலரால் முன்வைக்கப்படும் கருத்தாக உள்ளது. கட்சிகளின் நிலைப்பாட்டில் பெரிய வேறுபாடு இல்லாததால் தேர்தலில் எந்தத் தாக்கமும் இருக்காது (51.4), முக்கியமான சமூகப் பிரச்சனை என்பதால் நிச்சயம் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் (34.5) ஆகியவை அழுத்தமான பதிவுகள். ஆளும் கட்சி என்பதால் அதிமுக-வை வேண்டுமானால் கொஞ்சம் பாதிக்கலாம் (4.3) என்பது சிறுபான்மைப் பதில்.

## தேர்தல் களம்

***(13) அணிமாறும் காட்சிகள்:*** தேர்தல் கூட்டணி என்ற பெயரில் கட்சிகள் மாறி மாறி அணிசேர்ந்துகொள்வதைக் கண்டணத்துக்கு உரிய விஷயமாகப் பெரும்பான்மை மக்கள் கருதவில்லை. கடந்த ஆகஸ்ட் கணிப்போடு ஒப்பிடுகையில், தேர்தலுக்குச் சற்று அருகிலுள்ள ஜனவரியில் இந்தப் போக்கு இன்னும் வலுவாக வெளிப்படுகிறது.

| | ஆகஸ்ட் 2015 | ஜனவரி 2016 |
|---|---|---|
| அரசியலில் இது சகஜம், பெரிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது | 58.1 | 64.3 |
| கூட்டணிக் கட்சிகளின் அணுகுமுறைகளில் முரண்பாடுகள் வரும்போது அணிமாறுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது | 17.4 | 15.2 |
| ஜெயிப்பது மட்டுமே அக் கட்சிகளின் நோக்கம், கொள்கைகளைப் பற்றி அக்கறையில்லை | 12.8 | 8.1 |
| அடிக்கடி அணிமாறும் கட்சிகளைத் தடைசெய்வது நல்லது | 8.2 | 2.6 |

***(14) யார் தலைமையில் ஆட்சி என்ற யூகம்:***

வரும் சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சி / கூட்டணி தலைமையில் ஆட்சி அமையும் என்ற ***யூகத்தில்*** அதிமுக அணியை விட திமுக அணி சிறிதளவு முன்னிலை பெற்றுள்ளது.

| | |
|---|---|
| திமுக தலைமையில் ஆட்சி | 37.7 |
| அதிமுக தலைமையில் ஆட்சி | 35.7 |
| மக்கள் நலக் கூட்டணி தலைமையில் ஆட்சி | 5.4 |
| பாமக தலைமையில் ஆட்சி | 2.2 |

**(15) யாருக்கு வாக்கு?** தற்போதைய அரசியல் சூழலின் பின்னணியில், கூட்டணிகள் குறித்து எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் அதிமுக-வும் திமுக-வும் ஏறத்தாழச் சமமான ஆதரவு பெறுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அதிமுக | 33.3 | திமுக | 33.1 |
| தேமுதிக | 6.0 | பாமக | 3.2 |
| பாஜக | 2.0 | காங்கிரஸ் | 1.8 |
| மதிமுக | 1.5 | இடதுசாரிகள் | 1.2 |
| விசிக | 1.2 | தமாகா | 0.4 |
| முஸ்லிம் லீக் | 0.3 | புதிய தமிழகம் | 0.3 |
| நாம் தமிழர் | 0.3 | தவாக | 0.3 |
| சமக | 0.2 | இஜக | 0.2 |
| | | பிறர் / சுயேட்சை | 2.1 |
| | | நோடா | 3.3 |
| | | இப்போது சொல்ல முடியாது | 7.4 |

யூகத்தில் முன்னிலை பெற்ற திமுகவை விட, உண்மையான வாக்குகளைப் பொருத்தவரை அதிமுக முன்னிலை பெறுகிறது. எனினும், இரண்டுக்கும் இடையிலான மிகச் சன்னமான வேறுபாட்டை (0.2) புள்ளியியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருத இயலாது.

கடந்த ஆகஸ்ட் 2015 மற்றும் திருவரங்கம் இடைத்தேர்தல் பின்புலத்தில் நடத்தப்பட்ட நவம்பர் 2014 கணிப்புகளோடு ஒப்பிடுகையில் திமுக-வின் வாக்கு சீராக வளர்ந்தும் அதிமுக-வின் வாக்கு தேய்ந்தும் வந்திருப்பதை அறிய முடிகிறது.

| | ஜனவரி 2016 | ஆகஸ்ட் 2015 | நவம்பர் 2014 |
|---|---|---|---|
| அதிமுக | 33.3 | 34.1 | 43.0 |
| திமுக | 33.1 | 32.6 | 26.0 |

மேற்கண்ட ஆதரவுப் *போக்கையும்,* வரும் சட்டமன்றத் தேர்தலில் யார் தலைமையில் ஆட்சி அமையும் என்பது குறித்த *யூகத்தையும்* ஒருங்கிணைத்து நோக்கும்போது, திமுக-வுக்கு ஆதரவான களச்சூழல் உருவாகி வருவதை அவதானிக்கலாம்.

***(16) பிடித்த முதல்வர்:*** தாம் பார்த்த/கேள்விப்பட்ட வரை, தமிழகத்தில் இதுவரை இருந்துள்ள முதல்வர்களில் தமக்கு மிகவும் பிடித்தவராக மக்கள் கருதுபவர்களில் முதலிடம் காமராஜருக்குச் செல்கிறது.

| | | | |
|---|---|---|---|
| காமராஜர் | 46.5 | ராஜாஜி | 1.1 |
| எம்ஜிஆர் | 27.9 | பக்தவச்சலம் | 0.8 |
| கருணாநிதி | 8.7 | ஜானகி | 0.1 |
| அண்ணாதுரை | 7.1 | பன்னீர் செல்வம் | 0.1 |
| ஜெயலலிதா | 4.4 | யாருமில்லை | 0.8 |
| | | உறுதியாகச் சொல்ல இயலவில்லை | 2.7 |

***(17) சகாயம் ஐ.ஏ.எஸ். முதல்வராக வேண்டுமென்று கோரி*** சில சமூக வலைத்தள அமைப்புகள் முயற்சித்து வருவது குறித்து எதுவும் தெரியாது என்பதே மிகப் பெரும்பாலான வாக்காளர்களின் (62.5) கருத்தாக உள்ளது. இது பாராட்டப்பட வேண்டிய முயற்சி, ஆனால் மக்கள் ஆதரவு கிடைக்காது (13.1), இது விளம்பரத்திற்காகப் போடப்படும் ஸ்டண்ட், இதைப் பெரிதுபடுத்தத்

தேவையில்லை (9.7), அரசு ஊழியரான அவர், அவரது வேலையைச் செய்தாலே போதும் (5.3) ஆகியவை பிற முக்கிய பதில்கள்.

*(18) பொதுஇடங்களில் விஜயகாந்த்* நடந்துகொள்ளும் விதம் குறித்துப் பரவலாக முன்வைக்கப்படும் விமர்சனங்களால் அவருடைய கட்சி வரும் தேர்தலில் பாதிக்கப்படுமா என்ற கேள்விக்கு, இது ஒரு பிரச்சனையே அல்ல என்ற பதில் உறுதியாகப் பதிவாகியுள்ளது (56.4). தேமுதிக-வின் வெற்றிவாய்ப்பு இதனால் பாதிக்கப்படும் (20.7), இதனால் அவருக்கு ஆதரவு பெருகிவருகிறதே தவிர குறையவில்லை (12.4) ஆகிய முரண் பார்வைகளும் இடம் பெற்றுள்ளன.

*(19) ஸ்டாலினின் "நமக்கு நாமே" பயணத்தால்* மக்கள் மத்தியில் அவருக்குச் செல்வாக்குப் பெருகியுள்ளது என்ற பதில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுள்ளது (38.0). திமுக-வில் அவருக்குள்ள முன்னுரிமை உறுதியாகியுள்ளது (30.2), திமுக-வினருக்குப் புத்தெழுச்சியை ஊட்டியுள்ளது (8.0) ஆகியவை இந்தப் பயணத்துக்குக் கிடைக்கும் பாராட்டுக்கள். இது சும்மா வெறும் அரசியல் நாடகம், இதனால் பெரிய விளைவு எதுவும் இல்லை (14.3), இதனால் மக்களுக்குத் திமுக மீது ஏற்கெனவே இருந்த கோபம் இன்னும் அதிகமாகியுள்ளது (2.5) ஆகியவை இந்தப் பயணத்தின் மீது வைக்கப்படும் விமர்சனங்கள்.

*(20) பிடித்த நடிகர்:* தமிழக மக்களுக்குப் பிடித்த நடிகர்கள் வரிசையில் முதலிடம் அஜித்-துக்குச் செல்கிறது. அவருக்கு ஏறத்தாழச் சமமாக ரஜினி இடம் பெறுகிறார். எம்ஜிஆர், சிவாஜி தவிர்த்து முதல் அய்ந்து நடிகர்கள்:

| | |
|---|---|
| அஜித் | 16.0 |
| ரஜினி | 15.9 |
| விஜய் | 9.2 |
| கமல் | 5.9 |
| சூர்யா | 4.3 |

*(21) மக்கள் ஆய்வகம் கடந்த ஆகஸ்டில் நடத்திய கருத்துக் கணிப்பு மீதான விமர்சனங்கள் குறித்து:*

| | |
|---|---|
| அது நடுநிலையான, நம்பகமான கணிப்பு | 53.3 |
| அதிமுக-வுக்கு ஆதரவாக நடத்தப்பட்டது | 2.5 |
| மூன்றாவது அணி ஏற்படாமல் தடுப்பதற்காக நடத்தப்பட்டது | 1.2 |
| திமுக-வுக்கு / ஸ்டாலினுக்கு ஆதரவாக நடத்தப்பட்டது | 0.6 |
| பாமக-வின் செல்வாக்கை குறைத்துக் காட்டுவதற்காக நடத்தப்பட்டது | 0.1 |
| இந்தக் கணிப்பு குறித்து எதுவும் தெரியாது | 41.4 |

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வு
23 ஜனவரி 2016

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

© People Studies, 2016. No part / aspect of this Research Report may be used for purposes other than genuine journalistic reporting without written permission from People Studies.

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

***கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்***

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்: **ச.ராஜநாயகம்** / வெளியீடு: **மக்கள் ஆய்வகம்*** / ISBN: 978-81-910217-9-0

---

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:* S. Rajanayagam / *Publisher:* Routledge / *ISBN:* 978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030

---